**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.374** **நாள்: 11.08.2026**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மெரினா கடற்கரை பெசன்ட் நகர் கடற்கரை மற்றும் தலைமைச் செயலகப் பூங்கா பகுதிகளில் 44 இடங்களில் பயன்பாட்டில் இல்லாத இலவச வைஃபை (WiFi) வசதி 10.08.2026 முதல் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், செயற்கை நுண்ணறிவு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் மக்களுக்கு எளிதாக சேவைகளை வழங்கும் வகையிலும் திட்டமிட்டு செயலாற்றி வருகிறார்கள்.

இதன் ஒரு பகுதியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, சென்னையில் மக்கள் அதிகம் வந்து செல்லும் கடற்கரைப் பகுதிகளான மெரினா, பெசன்ட் நகர், திருவான்மியூர் கடற்கரை மற்றும் தலைமைச் செயலகப் பூங்கா பகுதிகளில் முதற்கட்டமாக மக்கள் தங்குதடையின்றி இணைய பயன்பாட்டினை மேற்கொள்ளும் வகையில் உயர்தரத்தில் இலவச வைஃபை (WiFi) வசதிக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அதில் மெரினா கடற்கரை, பெசன்ட் நகர் கடற்கரை மற்றும் தலைமைச் செயலகப் பூங்கா பகுதிகளில் 44 இடங்களில் பயன்பாட்டில் இல்லாத இலவச வைஃபை வசதி 10.08.2026 முதல் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மெரினா கடற்கரைப் பகுதியில் உழைப்பாளர் சிலை முதல் கலங்கரை விளக்கம் வரை 27 இடங்களிலும், பெசன்ட் நகர் கடற்கரைப் பகுதியில் 5 இடங்களிலும், தலைமைச் செயலகப் பூங்காவில் 12 இடங்களிலும் என மொத்தம் 44 இடங்களிலும் 10.08.2026 முதல் இலவச வைஃபை (WiFi) வசதி மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த வைஃபை வசதியினைப் பயன்படுத்துவதற்கு மக்கள் தங்கள் செல்பேசியில் வைஃபையினை ஆன் செய்து அதனை கிளிக் செய்தவுடன் வரும் QR Codeனை மீண்டும் கிளிக் செய்தவுடன், செல்பேசி எண்ணிற்கு வரும் OTP எண்ணை இதில் பதிவு செய்தவுடன் வைஃபை இணைப்பு ஏற்படும். மக்கள் இதனை இலவசமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இதன் தொடர்ச்சியாக, பொதுமக்கள் அதிகம் கூடுமிடங்களான இதர கடற்கரைப் பகுதிகள், பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள் உள்ளிட்ட மக்கள் அதிகம் வந்து செல்லும் இடங்களில் பயன்பாட்டில் இல்லாத வைஃபை வசதியினை மீண்டும் பயன்பாட்டிக்குக் கொண்டு வருதல் மற்றும் புதிதாக வைஃபை (WiFi) வசதியினை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**

**GREATER CHENNAI CORPORATION**

**PRESS RELEASE**

**P.R.No.374** **Date: 11.08.2026**

**As per the instructions of the Hon'ble Chief Minister of Tamil Nadu, the previously non-functional free WiFi facilities at 44 locations in the areas of Marina Beach, Besant Nagar Beach, and the Secretariat Park under the jurisdiction of the Greater Chennai Corporation have been brought back into public use from 10.08.2026.**

The Hon'ble Chief Minister of Tamil Nadu has been taking planned and proactive measures to promote the development of Artificial Intelligence, Information Technology, and digital services, and to make it easier for people to access various services.

As part of this initiative, and as per the instructions of the Hon'ble Chief Minister, measures were undertaken to provide high-quality free WiFi facilities in the first phase at popular public locations in Chennai, including Marina, Besant Nagar and Thiruvanmiyur beaches, and the Secretariat Park, enabling the public to access the internet without interruption. Accordingly, the previously non-functional free WiFi facilities at 44 locations in Marina Beach, Besant Nagar Beach, and the Secretariat Park have been restored and made available for public use from today.

A total of 44 locations have been provided with free WiFi facilities from 10.08.2026: 27 locations at Marina Beach, from the Labour Statue to the Lighthouse; 5 locations at Besant Nagar Beach; and 12 locations at the Secretariat Park.

To use this WiFi facility, people can turn on WiFi on their mobile phones and select the available WiFi network. After clicking the QR Code that appears, they need to enter the OTP received on their mobile number, following which the WiFi connection will be established. The public can use this facility free of charge.

As a continuation of this initiative, steps are being taken to restore previously non-functional WiFi facilities and establish new WiFi facilities at other locations where large numbers of people gather, including other beaches, parks, sports grounds, and similar public places.

**Released by: Joint Director/Public Relations Officer**
**Greater Chennai Corporation**